செ.வெ.எண்.85 நாள்.13.02.2018.

# பத்திரிக்கைச்செய்தி

உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் திருமதி.அமுதா இ.ஆ.ப.அவர்கள் உத்தரவிக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுரைப்படி 28.02.2018-க்குள் உணவு வணிகம் புரியும் வணிகர்கள் அனைவரும் பதிவுச் சான்றிதழ் அல்லது உரிமம் பெற்ற பின்னரே தொழில் நடத்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியதாவது, உணவு வணிகம் புரியும் வணிகர்களான உணவுப்பொருள் தயாரிப்பாளர்கள், மறுபொட்டலமிடுபவர், உணவுப்பொருள் மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம் செய்பவர்கள், ஹோட்டல்கள், டீக்கடைகள், ஸ்வீட் ஸ்டால், பேக்கரி நடத்துவோர், காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்வோர், வடை, பஜ்ஜி, போண்டா, முறுக்கு , அதிரசம் முதலிய பலகாரம் செய்து விற்போர் , சமையல் எண்ணெய் தயாரிப்பாளர், மற்றும் சில்லறை விற்பனையாளர், ரோட்டோரத்தில் கடை வைத்திருப்பவர்கள், பானிபூரி விற்போர், சில்லி சிக்கன் மற்றும் பாஸ்ட்புட் கடை வைத்திருப்போர், மட்டன், சிக்கன், மீன் இறைச்சி கடைக்காரர்கள், முட்டை விற்பனையாளர்கள், மாவு அரைத்து கொடுப்பவர்கள் மற்றும் விற்பனையாளர்கள், அரிசி ஆலை மற்றும் கடைக்காரர்கள், கரும்பு சாறு (ம) பழச்சாறு கடைகள், இட்லி, ஆப்பம், பணியாரம், புட்டு, கடலை முதலியன விற்கும் சிறு வியாபாரிகள், உணவுப்பொருள் ஏற்றிச்செல்லும் வாகனங்கள், பண்டிகைக்காலம் மற்றும் திருவிழாக்களில் தற்காலிகமாக உணவுப்பொருள் விற்போர்கள், குடிநீர் கேன்கள் மற்றும் பாக்கெட் விற்பனையாளர்கள், பால் விற்பனையாளர்கள் முதலியோர் உரிமம் (அ) பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

## உரிமம் பெறுவதற்கான / பதிவு செய்வதற்கான கட்டணம்

| | | |
|---|---|---|
| 01 | ஆண்டு விற்றுகொள்முதல் (Turnover) 12 லட்சத்திற்கும் கீழ் உணவு வணிகர் செய்வோர் நடமாடும் உணவு வணிகர் பெட்டி உணவு கடைகள் தற்காலிக கடைகள் | ரூ.100/- (1 ஆண்டுக்கு) |
| 02 | ஆண்டு விற்றுகொள்முதல் (Turnover) 12 லட்சத்திற்கும் மேல் உணவு வணிகம் செய்பவர்கள் சில்லறை வியாபாரம் உணவகம் விநியோகஸ்தர் உணவுப்பொருள் கொண்டு செல்லும் பெரிய வாகனம் | ரூ.2000/- (1 ஆண்டுக்கு) |
| 03 | மறு பொட்டலம் செய்பவர் (Repacker) | ரூ.3000/- (1 ஆண்டுக்கு) |
| 04 | தயாரிப்பாளர்கள் (நாள் ஒன்றிற்கு ஒரு மெ.டன்னிற்கு குறைவாக) | ரூ.3000/- (1ஆண்டுக்கு) |
| 05 | தயாரிப்பாளர்கள் (நாள் ஒன்றிற்கு ஒரு மெ.டன்னிற்கு அதிகமாக) 3 ஸ்டார் மேல் உள்ள உணவகங்கள் | ரூ.5000/- (1 ஆண்டுக்கு) |

உரிமம்/பதிவு சான்று அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் வரை பெற்றுக் கொள்ளலாம். அதற்கான கட்டணத்தை குறிப்பிடப்பட்ட வங்கிக்கிளைகளில் கருவூல செலுத்துச்சீட்டு மூலம் செலுத்தி, ஆன்லைன் மூலமாக **https//:foodlicensing.fssai.gov.in** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். பதிவுச்சான்றுகளை அருகிலுள்ள பொதுசேவை மையம் மூலமும் விண்ணப்பித்து உடனடியாக பெற்றுக்கொள்ளலாம். மேலும் கட்டணத்தை ஆன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

## கணக்குத்தலைப்பு

0210-Medical and Public Health – 04 Public Health – 800 other receipts 1-Non Plan – AM Food Safety Wing – Licence & Registration.
(DPC0210- 04-800-AM-0008) DO Code: DE401

உரிமம்/பதிவுச்சான்று பெறுவதற்கு ஏற்கனவே 31.01.2018 வரை காலஅவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட காலஅவகாசம் 28.02.2018 வரை, உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் திருமதி.அமுதா இ.ஆ.ப.அவர்கள் உத்தரவிக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுரைப்படி நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனை இறுதி வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்டு, உணவு வணிகர்கள் அனைவரும் உரிமம்/பதிவுச்சான்று பெற்றுக்கொண்டு, சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது குறித்த மேற்கண்ட விபரங்களுக்கு தங்கள் பகுதி உணவுப் பாதுகாப்பு அலுவலரை தொடர்பு கொள்ளவும் அல்லது உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட அலுவலக தொலைபேசி எண். 0462-255070 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.